29th March 1963]

திரு. ஜே. மாதா கவுடர்: ரூபாய் 10,000-க்கு மேல் வரும்படி இருந்துவிட்டால் முதல் தர பஞ்சாயத்தாகச் செய்யலாம் என்று இப்பொழுது சட்டம் இருக்கிறது. தற்பொழுது ரூபாய் 10,000-க்கு மேல் வருமானம் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களை முதல் தர பஞ்சாயத்துக்களாக செய்துவிட்டால், எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டியிருப்பதனால் அபிவிருத்தி வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே, ரூபாய் 10,000 என்பதை மாற்றி ரூபாய் 20,000-க்கு மேல் வரும்படி வரக்கூடிய பஞ்சாயத்துக்களைதான் முதல்தர பஞ்சாயத்துக்கள் என்று சொல்லக்கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கு தனி கேள்வி வேண்டும்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் (கணக்குத் தணிக்கை)

* 431 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பஞ்சாயத்துக்களின் வரவு-செலவுக் கணக்குகளை தணிக்கை செய்ய பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்களை நியமிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. நாராயணன்: இப்பொழுது பஞ்சாயத்துக்களில் 4 வருஷம் வரையில் ஆடிட் நடக்காமலேயே இருப்பதனால், அங்குள்ள விஷயங்களை கவனிப்பதற்கு முடியவில்லை. ஊழல் நிரம்பி வருகின்றது. அந்தந்த வருஷத்தில் ஆடிட் செய்தால் நல்ல முறையில் இருக்கும், ஊழலும் நடக்காது என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? இல்லையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. 'எக்ஸாமினர் ஆப் லோகல் பண்டு அகௌண்ட்ஸ்' அவர்கள்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஊழல் ஏதாவது இருந்தால், அது பரிசிலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. பஞ்சாயத்துக்களைப் பற்றி ஊழல்கள் நிறைந்ததாக இருக்கின்றன என்று சொல்லுவது முறை அல்ல.

திரு. இரா. நாராயணன்: இப்பொழுது ஈ.ஓ.பி.-யாக இருப்பவர் ஒரு மாதத்தில் எத்தனை பஞ்சாயத்துக்களை ஆடிட் செய்ய வேண்டும் என்ற முறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றியெல்லாம் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

[29th March 1963

திரு. ஜே. மாதா கவுடர் : தற்பொழுது ஈ. ஓ. பி. நியமித்த பிறகு 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆடிட் செய்யப்பட்டு, எந்த விதமான ஊழலும் இல்லை என்பதை அரசாங்கம் உணர்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு முன்னுல் ஒரு கனம் அங்கத்தினர் கேட்ட உப கேள்விக்கு இது விடை அளிப்பதாகும்.

Stray cattle

* 432 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the nuisance and congestion to traffic caused by stray cattle, allowed by their owners, to graze in public streets; and

(*b*) the measures, proposed by the Government to control the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The question of taking deterrent action against owners who allow cattle to stray in Madras City is under consideration.

The Cattle Trespass Act, 1871 provides for dealing with stray cattle in the moffussil. The question of amending this Act also is under consideration.

திரு. வி. எஸ். எஸ். மணி: கால்நடைகளின் தொல்லைகள் பெரும்பாலும் நகரங்களிலுள்ள வீதிகளில்தான் ஏற்படுகின்றன. அந்தக் கால்நடைகளை மேய்ப்பதற்காக சர்க்கார் பொது மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தி, கால்நடைகளை ஒவ்வொரு வீதியிலும் போய்ப் பிடித்து அந்த மேய்ச்சல் தரைக்குக் கொண்டுவருவதற்கு சர்க்காரில் ஆட்களை நியமித்து, அதற்கு ஏற்பாடு செய்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும். அம்மாதிரி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது இருக்கிற சட்டத்தை மாற்றி அமைப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது மாற்றி அமைக்கப்பட்ட பிறகு வேறு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. கோ. சி. மணி : கோவிலுக்குச் சொந்தமான மாடுகள் கோவில் காளை என்ற பெயரால் கடைவீதிகளில் அடிக்கடி தொல்லைகள் கொடுத்து அதனுல் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோவில் மாடும் மாடுதான். தனிப்பட்டவர்களின் மாடும் மாடுதான். தனிப்பட்டவர்கள் கவனிப்பதில்லை, மாடுகளை தெருக்களில் விட்டுவிடுகிறுர்கள்.